தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 31, பிரஜோற்பத்தி— திருவள்ளுவர் ஆண்டு, 2022

1991 செப்டம்பர் 16, திங்கட்கிழமை.

Chief Reporter Tamil Nadu Legislative Assembly Secretariat 12 OCT 1993 Madras-600 009

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று அப்பால்நாற் கூற்றே மருந்து.''

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறை அந்த நான்குவகைப் பாகுபாடு உடையது.

1. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிட்ட—வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள். வினா எண். 33, திரு. சோ. இராசாராமன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

திருவள்ளுவர் விரைவுப் பேருந்து.

33—
*126—திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர்—சென்னை, தடம் எண். 328, திருவள்ளுவர் விரைவுப் பேருந்து தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

[1991 செப்டம்பர் 16

(ஆ) டீசல் விநியோகம் சீரமைக்கப்பட்டதும், இவ்வழித் தடம் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 34, திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

அதிவீரராம பாண்டியன் பெயரில் போக்குவரத்துக் கழகம்.

34—

*366—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம், அதிராம்பட்டிணத்தை ஆண்ட பெரும்புலவர் அதிவீரராம பாண்டின் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், பட்டுக்கோட்டை அருகிலே இருக்கிற அதிராம் பட்டிணத்தை, பல ஆண்டுகளுக்கு முன்னதாக பெரும்புலவர் அதிவீரராம பாண்டியர் என்பவர் ஆண்டு கொண்டு வந்தார். மிகப் பெரிய சக்தி வாய்ந்த அந்த மனிதர், அந்தப் பகுதியிலே மிகப் பெரிய புலவராகவும், தர்மம் செய்கின்ற மன்னராகவும் திகழ்ந்தவர். ஆகவே, அதனை மீண்டும் பரிசீலனை செய்து, ஏதாவது ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு அவருடைய பெயரை வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,200 பேருந்துகள் இருந்தால் தான், அதைப் பிரிக்க வேண்டுமென்று தில்லைநாயகம் கமிட்டியினுடைய அறிக்கை வந்திருக்கிறது. ஆகவே, இந்தப் போக்குவரத்துக் கழகத்திலே அந்த அளவிற்கு 1,200 பேருந்துகள் இல்லை. இப்போது இருக்கிற 1,000-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இருக்கிற தந்தை பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திலே இருக்கிற சில வழித் தடங்களை பிரித்து, நம்முடைய ஒப்பற்றத் தலைவராக இருக்கிற புரட்சித் தலைவருடைய பெயரை வைக்க வேண்டுமென்று, நம்முடைய தமிழகத்தின் ஒப்பில்லா தலைவியாக இருக்கிற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், அதற்குப் பெயர் சூட்டியிருக்கிறார்கள். தங்களது கேள்விக்கு இப்போது இடமில்லை.